DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.262/19

Deposition of Witness: PW 6

| | |
|---|---|
| Name கருப்பாயி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.04.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அல்லிநகரத்தில் குடியிருக்கிறேன். விபத்திற்கு பிறகு கூலி வேலைக்கு செல்லவில்லை. அசா1 ஐ தெரியும், ஆஜர் எதிரியை தெரியும், விபத்தில் இறந்துபோன 5 பேர்களையும் தெரியும், விபத்தில் இறந்துபோன பேச்சியம்மாள் என் அம்மா. போடியிலிருந்து மதியம் 2 மணிக்கு கிளம்பி வெற்றிஅரசன் மகள் பவித்ரா வளைகாப்பு முடித்துவிட்டு தீர்த்ததொட்டி அருகே வந்தபோது தனியார் பேருந்து கவன இல்லாமல் தேனியிலிருந்து போடியை நோக்கி வந்தது. விபத்து ஏற்பட்டுவிட்டது. எனக்கு தலையிலும், முதுகிலும், இடதுகாலிலும் காயமானது. 8, 9 பேருக்கு காயங்கள் ஏற்பட்டது. வெற்றிஅரசன், சிற்றஅரசன், சரஸ்வதி, ரிட்டா, பேச்சியம்மாள் ஆகியோர் இறந்துவிட்டார்கள். சிகிச்சையாக க.விலக்கு மருத்துவமனைக்கு சென்றேன். 16 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். வழக்கு சம்பவம் பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.